## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No.** : **C. C. No. 5/2021**

**Prosecution Witness** : **P. W. 7**

| | | | |
|---|---|---|---|
| Name | : பலராமன் | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 23/03/2026

A1 - NBW Pending. A2, A3 absent.

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது பூவிருந்தவல்லி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன் செங்குன்றம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது கடந்த 13.01.2015 ம் தேதி மாலை 16.30 மணியளவில் எருக்கஞ்சேரியிலுள்ள பவித்ரா மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்ததின் அடிப்படையில், மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த புகார்தாரர் ராஜா என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்றேன். **புகார் வாக்குமூலம் அசா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார்தாரரிடம் இருந்து பெற்ற வாக்குமூலத்தை நிலையத்தில் 21.30 மணியளவில் குற்ற எண்.513/2018 ல் இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவயிடம் சென்று பட்டியல் சாட்சிகள் 1, 2 விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 14.09.2018 ம் தேதி காலை 8.00 மணியளவில் சம்பவயிடமான கண்ணாம்பாளையம்,

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

ஆண்டார்குப்பம் எஸ்ஸார் பெட்ரோல் பங்க் அருகில் பட்டியல் சாட்சி 3, 4 முன்னிலையில் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் வரைந்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அசா.ஆ.8, 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரிகளை தேடி வந்த நிலையில் அன்றைய தினமே 14.15 மணியளவில் விளாங்காடுபாக்கம் கால்நடை மருத்துவமனை அருகே பிரவீன்குமார், கோபிநாத், சலீம் ஆகியோர்களை கைது செய்து, பட்டியல் சாட்சிகள் 5, 6 ஆகியோர் முன்னிலையில் எதிரி கோபிநாத் என்பவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று, 14.30 மணிக்கு அவரிடமிருந்து TN 18 AR 7945 என்ற சாக்லேட் கலர் ஆக்டிவா இருசக்கர வாகனத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். **ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் முறையே அசா.ஆ. 10, 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எதிரிகளை காவல் நிலையம் அழைத்துச் சென்று பாரா வசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். அவரிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். **படிவம் 91 அசா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சி 1க்கு முதலுதவி சிகிச்சையளித்த மருத்துவர் சம்பத்குமார் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து விபத்து பதிவேடு பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **விபத்து பதிவேடு அசா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சி 1க்கு மேல் சிகிச்சையளித்த மருத்துவர் சுரேஷ்குமார் என்பவரை விசாரித்து அவரிடமிருந்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **காயச்சான்று**

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

**அசா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி இவ்வழக்கின் விசாரணை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>**

வழக்கில் காயம்பட்ட நபர் எந்த தேதியில் சிகிச்சை பெற சென்றார் என்றால், 13.09.2018 மாலை 3.30 மணிக்கு சென்றார். வழக்கு சம்பவம் எப்போது நடைபெற்றது என்றால், 13.09.2018 அதிகாலை 1.30 மணிக்கு நடந்தது. காயம் ஏற்பட்டு 14 மணிநேரம் இடைவெளிக்கு பின்பு தான் அவர் சிகிச்சைக்காக மருத்துவமனை சென்றிருக்கிறார் என்றால், சரிதான். ஏன் இந்த தாமதம் ஏற்பட்டது என்று நான் குறிப்பிட்டு விசாரணை செய்தேனா என்றால், நேரம் ஆக ஆக வலி கண்ணில் அதிகமானதால் சிகிச்சைக்கு நேரமானதாக சொன்னார்கள். அதே தினத்தில் தான் ஒரு எதிரியை கைது செய்தேன் என்றால், சரியல்ல. கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து பைக் நான் புகார்தாரரிடம் அடையாளம் காட்டி அந்த பைக்கில் தான் எதிரிகள் வந்து புகார்தாரரை தாக்கியதாக ஊர்ஜிதம் செய்து கொண்டேனா என்றால், இல்லை. பெட்ரோல் பங்க் உரிமையாளரையோ, மேலாளரையோ சம்பவம் நடந்தது குறித்து விசாரித்து அவர்களது வாக்குமூலங்கள் பதிவு செய்து கொண்டேனா என்றால், இல்லை. அந்த பெட்ரோல் பங்கில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்து, எந்த எதிரி பைக் ஓட்டி வந்தார், யார் தகராறு செய்தார் போன்ற விவரங்களை சேகரிக்கவில்லை என்றால், சரிதான். புகார்தாரர் அன்றைய தேதியில் பெட்ரோல் பங்கில் வேலை செய்தார் என்று காட்ட அதுகுறித்த ஆவணங்கள் கைப்பற்றினேனா என்றால், இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், தனக்கு விடுப்பு தரவில்லை என்ற காரணத்தால் புகார்தாரர் விடுப்பில் சென்றுவிட்டு, சம்மந்தப்படாத எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்து அதன் பேரில் நான் சரியாக விசாரிக்காமல் இறுதி அறிக்கை

SHANKARAN MANJULA Digitally signed by SHANKARAN MANJULA

எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. மருத்துவரிடம் புகார்தாரருக்கு ஏற்பட்ட காயம் பழைய காயமா அல்லது புதிய காயமா என்று கேட்டு விசாரித்தேனா என்றால், இல்லை.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA